# இயலிசை

தனி பிரதி விலை 50 காசுகள்

ஆண்டு சந்தா ரூ. 10/-

அரையாண்டு சந்தா ரூ. 5/-

சிறப்பாசிரியர் :
**சிதம்பரம் S. மீனாட்சிசுந்தரம்**

துணை ஆசிரியர் :
**K P. இளங்கோவன்**

'இயலிசை'
57, தெற்கு சிவன் கோயில் தெரு,
கோடம்பாக்கம், சென்னை-24

மலர் 2 | 15-11-83 இசைக்கலை உலக தமிழ் மாதமிருமுறை | இதழ் 13


புதிய இசைத்தட்டு கம்பெனியின்

## பாலமுரளியார் பாடிய நவக்கிரக பாடல்கள் இசைச்சுட்டி!

சென்னை எழும்பூரில் சிஸன்ஸ் எலக்ட்ரானிக்ஸ் Cisons Electronics) என்ற ஒரு புது இசைத் தட்டு இசைச்சுட்டி (Cassettes) நிறுவனம் துவக்கப்பட்டுள்ளது. அக்கம்பெனி இதுவரை கீழ்க் கண்ட இசைச்சுட்டிகளை விற் பனைக்கு வெளியிட்டுள்ளனர்.

டாக்டர் M. பாலமுரளி கிருஷ்ணா பாடிய 'நவக்கிரக பாடல்கள்' —இசை ; சுரும்பி யன்.

P. சுசிலா பாடிய 'நவராத்ரி நாயகி' பாடல்கள் இசை V. குமார்

சீபன் சக்ரவர்த்தி பாடிய 'குமரக் கோட்டங்கள்' இசை— T. L. மகராசன்

பாடல்கள் அனைத்தையும் தமிழ் நம்பி எழுதியுள்ளார்.

கீழ்க்கண்ட இசைச்சுட்டிகளை யும் விரைவில் வெளியிட உள்ள னர்.

ராஜ குமார் பாரதி பாடிய 'மாலவன் ஆலயங்கள்; T. L. மகராசன் பாடிய 'சாஸ்தா கீதங்கள்'

இவைகள் அனைத்தும் விரை வில் நீண்ட இசைத்தட்டுகளாக வும் வெளிவரும்.

## வழுவூரார் இல்லத் திருமணம் கலைஞர்கள் வாழ்த்து!

நாட்டிய மேதை வழுவூர் இராமையா பிள்ளை மகன் நடன ஆசிரியர் R. சாம்ராஜ் அவர் களின் மகள் செல்வி பால நாகம்மா கும்பகோணம் செல் வன் R. வெங்கடேசன் B. Com (State Bank of India) இவர் கள் திருமணம் கடந்த 11-11-83 அன்று சென்னை மயிலையில் சிறப் பாக நடைபெற்றது. கோட்டூர் சகோதரர்கள், திருப்பாம்புரம் சகோதரர்கள், மதுரை M. P. N. சகோதரர்கள் நாதசுர நிகழ்ச்சி யுடன் அரித்துவாரமங்கலம் A. K. பழநிவேல், திருவாளபுத் தூர் T. A. கலிய மூர்த்தி, தஞ் சாவூர் T. R. கோவிந்தராசன், வேதாரண்யம் G. பால சுப்ர மண்யம் ஆகியோர் தவில்கள் வாசித்தனர். மாலை வரவேற்பில் டாக்டர் M பாலமுரளிகிருஷ்ணா குழுவினர் இன்னிசை நடை பெற்றது. மணவிழாவிற்கு ஏராள கலைஞர்கள், கலை உலக அன்பர்கள், நடிக நடிகர்கள் வந்து மணமக்களை வாழ்த்தினர். மணமக்களுக்கு இயலிசை வாழ்த்துக்கள்!

## கரூரில் கழுகுமலையார் கச்சேரி!

கரூரில் இசைப்பணி செய்து வரும். பழம் பெரும் நாரத கான சபையில் 19—11—83 அன்று திருமதி M. ரங்கநாயகி குழுவி னர் வீணை நிகழ்ச்சி நடைபெற் றது.

இச்சபையில் அடுத்த மாதம் 19-12-83 அன்று தமிழ் இசைச் செல்வன் கழுகு மலை கந்தசாமி அவர்கள் குழுவினர் இசை நிகழ்ச்சியினையும் ஏற்பாடு செய் துள்ளனர்.



சென்னை கீழ்ப்பாக்கத்தில் மருத்துவமாமணி ரத்தினவேல் சுப்பிரமணியம் அவர்கள் ஓர் இசைப்பள்ளி நடத்தி வருகின் றார். அதில் இசையாசிரியராக பணியாற்றும் தஞ்சை B. N. நாகராசன், மணவிகள் திருமதி ராஜகுமாரி ரவீந்திரநாத் B. A. சுந்தரி ராஜாராம் திருவேதி B. A. இவர்கள் இசை நிகழ்ச்சி மயிலை பால விநாயகர் கோவிலில் சமீபத்தில் நடைபெற்றது. இவர் கள் தற்பொழுது பல இடங்களி லும் பாடி ரசிகர்கள் ஆதரவு பெற்று வருகின்றனர்.

கந்தகோட்டத்தில்

## வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள் விழா

சென்ற நூற்றாண்டில் வாழ்ந்த முருகனடியார் வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள். இவர் ஏராள தமிழ்ப்பாடல்களும் பாடி தமிழிசைக்கும் தந்துள் ளார். இவரது 115வது பிறந்த நாள் விழாவினை சென்னை பூங்கா நகர் இரும்பு வணிகர்கள் ஊழி யர்கள் கந்த கோட்டத்தில் 30-11-83 அன்று நடத்த உள் ளனர். அன்று காலை குடந்தை வே. லட்சுமணன் குழுவினரால் சுவாமிகள் பாடல்கள், திருமறை இசை நிகழ்ச்சியும் மாலை புலவர் மு. சங்கரலிங்கம் அவர்கள் சொற்பொழிவும் நடைபெறும். பின்னர் சிதம்பரம் S. மீனாட்சி சுந்தரம் குழுவினர் இன்னிசை நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட் டுள்ளது விழாவினையொட்டி முருகபெருமானுக்கு சிறப்பு வழிபாடுகள் செய்யஉள்ளனர்,

வயலின் கலைஞர்

## சௌடய்யா நினைவுகூட ஆண்டு விழா! பெங்களூரில் நடைபெற்றது

கர்நாடக மாநிலத்தில் வாழ்ந்து மறைந்த வயலின் இசை மேதை மைசூர் சௌடய்யா அவர்கள் நினைவாக பெங்களூரில் சபைக்கூடம் ஒன்று கட்டி கலை நிகழ்ச்சிகளை நடத்தி வருகின்றனர். அதன் 3வது ஆண்டு விழா நவம்பர் 14 முதல் 20 வரை நடைபெறுகின்றது. மாநில ஆளுநர் மேதகு அசோக் நாத் பானர்ஜி துவக்க, விழா விற்கு பத்மபூஷண் V. துரைசாமி அய்யங்கர் தலைமை வகிக்கின்றார் இவ்வருட சபையின் தேசிய விரு தினை வயலின் பேராசிரியர் T. N. கிருஷ்ணனுக்கும் மாநிலவிருதினை இசைக்கலைஞர் A. S. சிவருத்தி ரப்பா அவர்களுக்கும் வழங்கு கின்றனர். 1 வாரம்நடைபெறும். கலைநிகழ்ச்சிகளில் T. N. கிருஷ் ணன் வயலின், வாஸ்டர்வி. சீனு வாஸ்-மாண்டலின், டாக்டர் M. பாலமுரளி, திண்டுக்கல் S.P. நட ராசன் இவர்கள் இசை நிகழ்ச்சி களும் குமாரி சோபா நாயுடு குச்சிபுடி நடனநிகழ்ச்சியும் நடை பெறுகின்றன.

## டாக்டர் சீர்காழியாருக்கு பாராட்டு!

இசைமணி சீர்காழி கோவிந்த ராசன் அவர்கள் சென்னைப் பல் கலைக்கழகத்தில் இசைத்துறைக்கு டாக்டர் பட்டம் பெற்றதனை பாராட்டி சென்னை திருவல்லிக் கேணியில் உள்ள ஸ்ரீ நடராசா கல்விக்கழகம் 2-11-83 அன்று பெரும் விழா நடத்தினர். விழா வில் ஏழை பள்ளி மாணவ மாணவிகளுக்கு சீருடை வழங்கி னர். பின்னர் சீர்காழியாரைப் பாராட்டி தவத்திரு மயிலை மாமுனிவர் குருஜி, அமுதசுரபி விக்ரமன், முன்னாள் நடுவர் N. கிருஷ்ணசாமி ரெட்டியார், மனசை ப. கீரன் ஆகியோர் பேசினர். செயலாளர் ர. நடரா சன் அனைவரையும் வரவேற்றார்.

ந. இராமநாதன்,
18, 4வது பிரதான சாலை
இராசா அண்ணாமலைபுரம்
சென்னை - 28

भारत INDIA 5

TN/MS(S) 260
'IYALLISAI' Musical Bi-Monthly Printed by T Thirunavukarasu at Jayalakshmi Art Printers Kavarai Street, Vadapalani, Madras 600 026. Published & Edited by M. Lakshmi, 57, South Sivan Koil Street, KODAMBAKKAM, MADRAS - 600 024,

கலைத் தொடர் கதை

# ஆடலரசி அபிராமி

## 10. அபிராமியின் தடுமாற்றம்

[illegible]க்குள் ஆயிரம் [illegible] வேற்றுமைகள் [illegible] போட்டி இருக்கும் [illegible] நேரில் சந்தித்து [illegible]டால் அவர்கள் பேசுவதையும் ஒருவரையொருவர் பாராட்டிக் கொள்வதையும் பார்த்தால் அவர்களுக்குள் வேற்றுமை இருப்பதாகவே பிறருக்கு தெரியாது. மிகவும் வேற்றுமையுடையவர்களாக இருந்தால் பார்த்தும் பாராதவாறு சென்று விடுவதும் உண்டு. நடுவில் விபரம் புரியாதவர்கள் இருவரையும் கூட்டி அறிமுகம் படுத்தினாலும் தெரியாதவர்கள் போல இருவருமே நடித்துவிட்டு செல்வதும் உண்டு. பொதுவாக அதிகமாகப் பேசும் கலைஞர்கள் மற்றொரு கலைஞரைக் கண்டுவிட்டால் வார்த்தைகளை அளந்துதான் பேசுவார்கள். சில சமயம் அதில் "பொடி" வைத்துப் பேசுவதுண்டு. கலைஞர்களின் இந்த நாகரீகம் இன்றும் அன்றும் என்றும் இருப்பதாகும்.

கும்பகோணம் ரயிலடிக்கு வந்த அபிராமி சுந்தரிக்கு ஏற்கெனவே அங்கு ரயிலடியில் குத்தாலம் பாப்பா குழுவினர் வந்திருக்கும் செய்தியினை வாசலிலேயே அறிந்து கொண்டாள். உடனே தாத்தாவைப் பார்த்து "தாத்தா உங்கள் பழைய சிஷ்யையைப் பார்க்கவில்லையா" என்று கேட்டாள்.

தாத்தா சிரித்துக் கொண்டு, அவளே வருவாம்மா என்றார். அதற்குள் இளையராசா "யாரு" என்று அபிராமியைக் கேட்டார். அதற்கு அபிராமி இளைய ராசாவைப் பார்த்து "கலா ரசிகருக்கு சதுராடும் குத்தாலம் குழந்தையை தெரியாதோ" என்று பாப்பா என்ற பெயரைக் கிண்டல் செய்து பேசினாள்.

குத்தாலம் பாப்பாவிற்கு அன்று அனைவருமே மதிப்பும் மரியாதையும் தருவார்கள். எனவே இளையராசாவுக்கு அபிராமி அவ்வாறு பேசுவது பிடிக்கவில்லை. எனவே அபிராமியிடம் "குத்தாலம் பாப்பா அம்மையார் நல்ல அனுபவமாக சதுராடுவார்கள் என்று சொல்வார்கள், நான் அதிகம் பார்த்ததில்லை" என்று அனுபவம் என்ற வார்த்தையை அழுத்தி சொன்னார். அபிராமிக்கு இன்னும் அனுபவம் போதவில்லை என்பதனை சுட்டிக்காட்டவும் அவர் விரும்பினார்.

அபிராமிக்கு அது உடனே விளங்கவில்லை. அவளோ "ராசாவுக்கு இன்று அந்த குறை தீர்ந்துவிடும். அம்மையார் அனுபவத்தில் நீங்களும் பங்கு போட்டு கொள்ளலாம்" என்று எத்தனையோ அர்த்தங்களை வைத்துக் கொண்டு பேசினாள்.

எந்தப் பெண்ணுக்குத்தான் தனது காதலன் இன்னொருத்தியை புகழ்ந்து பேசுவது பிடிக்கும். அதிலும் பாப்பாவைப் பற்றி அவள் பல விஷயங்கள் கேள்விப்பட்டிருந்தாள். பாப்பா நினைத்தால் யாரையும் தன் வலையில் வீழ்த்தி விடுவாள் என்று அவள் அம்மா எப்பொழுதோ சொன்னதில்லையா. அதனால் இளைய ராசா அவளைச் சந்திப்பதனையே இவள் விரும்பவில்லை என்றாலும் இப்பொழுது அந்த சந்திப்பு தவிர்க்க முடியாதது என்பதனையும் தெரிந்து கொண்டாள். அதுவே அவளுக்கு ஏற்பட்ட படபடப்பு. வார்த்தைகள் தடுமாற்றம்.

இதற்குள் பாப்பாவிற்கு அபிராமியும் நட்டுவனரும் இளைய ராசாவும் வந்திருக்கும் செய்தியறிந்து பாப்பாவே அவர்களை எதிர்கொண்டு அழைக்க வந்துவிட்டாள். அவள் பின்னால் சில பெரிய மனிதர்களும் வந்தனர். பாப்பா முதலில் கணபதி பிள்ளைக்கு வணக்கம் தெரிவித்து அங்கேயே நாலில் விழுந்து வணங்கினாள். கணபதி பிள்ளைக்கு உச்சி குளிர்ந்து விட்டது. நட்டுவனருக்கு மாணவிகள் இது போன்ற சமயங்களில் தரும் மரியாதைதான் அவர்கள் தரும் தட்சணையை விட மிகவும் பிடித்தமானது. மற்ற குரு நாதர்களுக்கும் இது பொருந்தலாம்.

உடனே நட்டுவனர் வழக்கப்படி அறிமுகங்களை ஆரம்பித்தார் அபிராமியை பார்த்து, பாப்பா, பங்கஜத்து அக்காமவதானே அக்கா நலமா......ஊரெல்லாம் உன் பேச்சாதாம்மா இருக்குது. இளையராசா மாளிகையில் சிம்மநந்தனம் ஆடினயாமே கேள்விபட்டு மிகவும் சந்தோஷப்பட்டேன்" என்று சொல்லி இளைய ராசாவையும் பார்த்து கைகூப்பி வணக்கம் தெரிவித்தாள்.

அவளது பெருந்தன்மையான பேச்சு அனைவரையும் கவர்ந்து பாப்பாவிற்கு மேலும் மதிப்பு சேர்த்தது. அபிராமியையும் இணங்கச் செய்தது. திருப்பி வணக்கம் தெரிவித்து விட்டு "அம்மாவுக்கு இப்பொழுது உடல் நலம் பரவாயில்லை. சிம்மநந்தனம் ஆடியது பற்றி உங்களுக்கு எப்படி தெரிந்தது அக்கா" என்று கேட்டாள் தனது சிம்மநந்தன நாட்டியப் பெருமையை மேலும் பாப்பா வாயால் சொல்ல அதனை இளைய ராசா கேட்க வேண்டும் என்று அவளுக்கு ஆவல்.

"கும்பகோணம் அய்யர்தான் சொன்னார். தரையிலே அப்படியே சிம்மம் வந்துதாமே, ஊம்...... பேத்திக்கு மட்டும் தான் தாத்தா சிம்மநந்தனத்தை சொல்லி கொடுத்திருக்கார்" என்று தன் ஆதங்கத்தை வெளியிட்டாள் பாப்பா. அபிராமி இளையராசாவை ஓரக்கண்ணால் பார்த்து புன்னகைத்தாள். பின் ஊம் தானுகவா சிம்மம் வந்தது தாத்தா தயவால்தான் வந்தது" என்று குருவுக்கு மரியாதை தெரிவித்தாள். அதில் இளையராசா மாடியிலிருந்து ஊடல் முடிந்து இறங்கி வந்ததனையும் குறிப்பிட்டு சொல்லுவாள். நட்டுவனருக்கு மேலும் உச்சி உறைந்தது. எனினும் இளையராசாவுக்கு புரிந்தளவு அபிராமியின் வார்த்தைகளின் முழு கருத்தினையும் அவர் அறிந்து கொண்டிருக்க முடியுமா?

இவ்வாறு இவர்கள் பேசிக் கொண்டிருக்கும் பொழுது மேற்கே போகும் ரயில் விரைவில் வருகிறது என்று அறிவிக்கும் முதல் மணியை ரயில் நிலையத்தில் அடித்தனர். அதனைக்கேட்டு அனைவரும் ரயில்நிலையம் உள்ளே வந்தனர்.

அக்காலத்தில் ரயிலில் மூன்று வகுப்புக்கள் உண்டு முதல் வகுப்பில் பெரும்பாலும் வெள்ளைக்காரர்கள்தான் செல்வார்கள். இந்தியர்கள் பயணம் செய்வதை அவர்கள் விரும்பமாட்டார்கள். மூன்றுவது வகுப்பில் பொது மக்கள் செல்வார்கள். இரண்டாவது வகுப்பில் வசதி உள்ளவர்களும் கலைஞர்களும் செல்வார்கள்.

அபிராமி பந்தனை நல்லூருக்கு செல்ல குத்தாலம் ரயிலடியில் இறங்கிதான் செல்ல வேண்டும். நட்டுவனர் கணபதிபிள்ளை தனது குழுவினருக்கு இரண்டாம் வகுப்பு டீட்டுகள் வாங்க அவசரமாகச் சென்றார். அப்பொழுது இவர்களை எதிர்கொண்டு அழைப்பது போல் பாப்பா மகன் மகாராசன் அங்கு வந்தான். வந்தவன் அபிராமியையும் இளைய ராசாவையும் ஒருசேர கண்டு அதிர்ச்சியுற்றான்.

(தொடரும்)